# பக்தி இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள்

75

**Dr E. Gowthamaselvi**
**Assistant Professor Of Tamil, Auxilium College (Autonomous)**
**Vellore – 632006. India.**

**ஆய்வுச் சுருக்கம்**

இலக்கியம் தான் தோன்றிய சமுதாயத்தின் பண்பாட்டையும் நாகரீகத்தையும், அக்கால மக்களின் அறிவையும் எடுத்தியம்புவதாக விளங்குகிறது. இருபதாம் நூற்றாண்டை அறிவியல் யுகம் என்று கூறலாம். அறிவியல் கண்டுபிடிப்புகளும் சாதனைகளும் எண்ணிலடங்காது. அறிவியல் வளர்ச்சி பெற்று விளங்கும் கருத்துகள், புராணங்கள், இதிகாசங்கள், சங்க இலக்கியம் என அனைத்து வகையான இலக்கியங்களிலும் மிளிர்கிறது. இன்றைய மேனாட்டு அறிவியல் சிந்தனைகளின் சுவடுகூடப் படாத பண்டைத் தமிழரிடையே இருந்த அறிவியல் உணர்வு நம்மை வியக்கவைக்கிறது. அவற்றில் பக்தி இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகளின் ஒரு பிரிவாகிய உயிர்களின் பரிணாம வளர்ச்சி குறித்து சைவ, வைணவ இலக்கியங்களின் வழி எடுத்துரைப்பதே இவ்வாய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள் :** புராணங்கள். 2. அறிவியல். 3. திருமால், 4. திருவாசகம். 5. பரிணாம வளர்ச்சி.

**முன்னுரை**

இலக்கியம் என்பது சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடி. இவை காலத்திற்கு ஏற்றவாறு தன் பாடுபொருளையும், பரிமாணத்தையும் விரிவுபடுத்திக் கொண்டே இருக்கும். நாம் வாழும் உலகம் அறிவியல் உலகமாக மாறிக்கொண்டிருக்கிறது. மாறும் காலத்திற்கேற்ப இலக்கியங்களும் அறிவியலை படைப்பிலக்கியத்தில் பயன்படுத்தி வருகிறது. சங்க இலக்கியம், நீதி இலக்கியம், பக்தி இலக்கியம், காப்பியங்கள், புராண இதிகாசங்கள், நவீன இலக்கியங்கள் என பல பரிமாணங்களை உள்ளடக்கியதாக தமிழ் இலக்கியங்கள் உள்ளன. அவ்வகையில் பக்தி இலக்கியத்தில் காணப்படும் அறிவியல் சிந்தனைகளை இக்கட்டுரையில் காணலாம்.

**அறிவியல்**

நவீன உலகில் அனைத்து தளங்களிலும் அறிவியல் என்ற கருத்தாக்கம் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இருப்பினும், அறிவியல் என்றால் என்ன என்பதற்கான விளக்கம் பிடிபடாமல் உள்ளது. அறிவியல் என்பது உண்மை, பகுத்தறிவு, புறவயத்தன்மை, அறிவு, பேதமை போன்ற உள்ளடக்கங்களோடு தொடர்புடையனவாக இருக்கிறது. மனித மனம் பல்வேறு தேவைகளாலும், கவலைகளாலும் ஆனது. மனதை பக்குவப்படுத்தும் சாதனங்களில் பக்தி முக்கிய பங்கு வகிக்கிறது. பக்தி என்பது மூடத்தனமான ஒரு செயல் அல்ல. அது விஞ்ஞான ரீதியான ஓர் உளவியல் இயக்கம். உயிர்களின் தேவை என்பதை யாராலும் மறுக்க இயலாது. சிவம் சக்தியாக மாறுவதும், சக்தி சிவமாக மாறுவதும், பின் பிரிந்து இருப்பதும், மீண்டும் இணைவது பக்தியின் அடிப்படை தத்துவமாகும். இந்த அடிப்படை தத்துவத்தையே விஞ்ஞானம், பொருள் சக்தியாக மாறும் என்கிறது.





இதுவே அணுசக்தியின் அடிப்படை சமன்பாடு ஆகும்.

தமிழர்கள் தங்கள் வாழ்வில் பின்பற்றி பழக்கவழக்கங்கள் சமய நம்பிக்ககைகள் ஆகியவற்றில் அறிவியல் சார்ந்த செய்திகள் பொதிந்து இருப்பது உண்மை. அவ்வகையில் பக்தியினூடாக இறைவனுக்காகப் படைக்கப்பட்ட பக்தி இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள் காணப்படுகின்றன.

”எப்பொருள் எந்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு”[1] (குறள் - 335)

என்னும் தத்துவ ஞானத்தின் விளக்கமாக அறிவு விருப்பு வெறுப்பற்ற தன்மை உடையதாக இருப்பதையே தம் சிந்தனையாக கூறியுள்ளார் திருவள்ளுவர்.

**உயிர்களின் தோற்றம்**

உயிர்களின் வளர்ச்சியின் சிறப்பை எழிலுற எடுத்துக்காட்டுவதே இறைவனின் அவதாரங்களின் தத்துவமாகும். உயிர்கள் படிப்படியே சிறந்து வளர்ந்த முறையினைச் சைவ நன்மணியாகிய மணிவாசகப் பெருமானும் திருவாசகத்தில் உயிர்கள் படிப்படியே சிறந்து வளர்ந்த முறையினை,

”புல்லாகிப் பூடாய்ப்
புழுவாய் மரமாகி
பல்விருக மாகிப்
பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப்
பேயாய் கணங்களாய்
வல்லசுர ராகி
முனிவராய் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர
சங்கமத்துள் எல்லாப் பிறப்பும்
பிறந்து இளைத்தேனே”[2] (சிவபுராணம் – 26 -31) திருவாசகம்

என்று விதந்தோதுகின்றார். இப்பாடல் படிப்படியாகச் சிறந்து வளர்ந்த பிறவியே மனிதப் பிறவி என்பதை எடுத்துக்காட்டுகிறது.

உயிர்களுக்கு நால்வகைத் தோற்றமும் எழுவகைப் பிறப்பும் என நூல்களில் கூறப்படும். முட்டையிற் பிறப்பன, வேர்வையிற் பிறப்பன, வித்திற் பிறப்பன, கருவிற் பிறப்பன என்பன நான்கு வகைத் தோற்றமாகும். .இவை முறையே அண்டசம், சராயுசம் எனப்படும். தாவரம், நீர் வாழ்வன, ஊர்வன, பறவை, விலங்கு, மனிதர், தேவர் என்பன எழுவகைப் பிறப்பாகும். இத்தனை பிறப்புகளை எடுத்து உழல்கின்றன என்பதை விளக்க, 'பிறந்து இளைத்தேன்' என்கிறார் மாணிக்கவாசகர்.

**பரிணாம வளர்ச்சியும் அவதாரச் சிறப்பும்**

திருமாலின் திருஅவதாரங்கள் பத்து. அவை 1.மச்சம், 2.கூர்மம், 3.வராகம், 4.நரசிம்மம், 5.

வாமனம், 6.பரசுராமன், 7.ராமன், 8. பலராமன், 9.கண்ணன். 10, கல்கி என்னும் பெயருடையவை.

அவதாரங்களின் வரிசை முறைகளை ஆய்ந்து பார்த்தால் நமக்கோர் உண்மை நன்கு புலப்படும். சிற்றறிவுடைய உயிரினமாகிய மீன் அவதாரத்திலிருந்து படிப்படியே சிறந்து வளர்ந்து பேரறிவுடைய கண்ணன் அவதாரம் கொண்டு திருமால் நிற்கின்றார். உலகு தோன்றிய காலத்திலிருந்து உயிரினங்கள் படிப்படியாகத்தான் சிறந்து வளர்ந்து வந்திருக்கின்றன என்னும் அறிவியல் உண்மையை மறைமுகமாக எடுத்துக் கூறுகின்றது.

"மேலை நாட்டவரான டார்வின் என்பார் ஆராய்ந்து உலகுக்கு உணர்த்திய கொள்கையே பரிணாமக் கொள்கை என்பது, உள்ளது சிறத்தல் (Evolution) என்னும் இக்கொள்கையைத் திருமாலின் திருஅவதாரங்கள், பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே உணர்த்தியுள்ளதைக் கண்டு நாம் உண்மையிலேயே வியப்பெய்தி நிற்கிறோம்"[3] (ப- 15. திருமாலின் அவதாரங்கள்)

1.மச்சம் – (மீன் – நீர் வாழ்வன)

பிரளய காலத்தில் மீனாக திருமால் அவதாரம் எடுத்து உலகை காப்பாற்றியதாக புராணம் கூறுகிறது. பரிணாமவியல் கொள்கைப்படி நீரில் வாழும் உயிரினமான மீனிலிருந்தே உயிரினங்களின் தோற்றம் உள்ளது என்பதை குறிக்கிறது.

2.கூர்மம் – (ஆமை –நீர் நில வாழ்வன)

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலை கடையும்போது, மேருமலையை தாங்கிப்பிடித்த திருமால் ஆமை வடிவமாக அவதாரம் எடுத்தார். பரிணாமக் கொள்கைப்படி நீர்வாழும் உயிர் நீர்நில வாழும் உயிராக மாற்றம் அடைந்ததை அறிய முடிகிறது.

3.வராகம் – (பன்றி – நிலத்தில் வாழும் பாலுட்டி)

இரணியாசுரன் எனும் அரக்கனிடமிருந்து பூமியை காப்பாற்ற திருமால் எடுத்த அவதாரம். நீர்நில வாழ்பவையாக இருந்த உயிரினம் நில வாழ்பவையாக மாறியதை குறிக்கிறது.

4.நரசிம்மம் – (மிருகம் - மனிதம்)

மனிதன் பாதியாகவும் மிருகம் பாதியாகவும் இரணியனை அழிக்க எடுத்த அவதாரம் நிலவாழ்பவையாக இருந்த மிருகம் சிந்தனைத் திறன் பெற்று மனிதன் பாதி, மிருகம் பாதியாக இருந்த தொடக்கநிலையைக் காட்டுகிறது.

5. வாமனம் (மனிதன்)

தசவதாரத்தின் ஐந்தாவது அவதாரம், பரிணாமக் கொள்கைப்படி முழு மனிதனை இந்த அவதாரம் குறிக்கின்றது.

6. பரசுராமன் – (மூர்க்கமான மனிதன்)

இந்த அவதாரம் மிகவும் மூர்க்க மனிதன் கோடாரி ஆயுதத்தினை சிவனிடமிருந்து பெற்று மிருகங்களை வேட்டையாடுவதாக காணப்படுகிறது.

7. ராமன் (தலைவன்)

ஏழாவது அவதாரம் இராவணனை அழிப்பதற்காக எடுக்கப்பட்ட அந்த அவதாரம் மனிதன் குழுக்களாக இணைந்து தலைவனை தேர்ந்தெடுத்து வாழ்ந்தமையைக் கூறுகின்றது.

8. பலராமன் (விவசாயம் செய்யும் மனிதன்)

கிருஷ்ணனின் அண்ணனாக அவதரித்த பலராமர் கைகளில் ஏர் கலப்பையுடன் விவசாயம் செய்யும் மனிதனை குறிக்கிறது.

9. கிருஷ்ணன் (கால்நடைகளை மேய்க்கும் மனிதன்)

கம்சன் என்னும் அரக்கனை அழிக்க எடுத்த கிருஷ்ணவதாரம், ஆடுகளையும்,, மாடுகளையும் மேய்க்கும் சிறுவனாக இருந்தது, கால்நடைகளை தங்களின் வேலைகளுக்குப் பயன்படுத்திக் கொண்ட மனிதர்களின் பரிணாமத்தின் வெளிப்பாடாக விளங்குகிறது.

10. கல்கி (இறுதி)

கலியுகத்தின் முடிவில் திருமால் எடுக்கும் அவதாரமாக புராணம் கூறுகிறது. ஆயதங்களும் வாகனமும், நவீன தொழில்நுட்பமும் கொண்டு தினம் தினம் சிந்தனையில் வளர்ந்து கொண்டிருக்கும் மனிதன் மகாசக்தியாக மாறுவதின் அடையாளமாகத் திகழ்கிறது.

**அணு ஆற்றல்**

அணு என்னும் கண்ணுக்குப் புலப்படாத மிகநுண்ணியத் துகளை இவ்வுலகிற்கு அறிமுகம் செய்தவர் 'ஐன்ஸ்டைன்' ஆவார். நாம் எழுதும்போது வைக்கும் ஒரு முற்றுப்புள்ளிக்குள் அரைகோடி அணுக்களை அடக்கிவிடலாம். அப்படிப்பட்ட மிகச் சிறிய அணுவின் ஆற்றலை கம்பர்,

"சாணினும் உளன்ஓர் தன்மை அணுவினைச் சக கூறுஇட்ட
கோணினும் உளன் மாமேருக் குன்றினும் உளன் இந்நின்ற
தூணினும் உளன் நீசொன்ன சொல்லினும் உளன் இத்தன்மை
காணுதி விரைவின் என்றான் நன்று எனக் கனகன் சொன்னான்"[4]

(கம்பராமாயணம் –பா-6312)

என்று கூறுகிறார். இப்பாடலில் இரணியனுக்குப் பிரகலாதன் கடவுள் அணுவினைப் பிரித்தால் அதனினும் இருப்பவன் என்று கூறுவதன் வழி அணுவினை பிரிக்க முடியும் என்பதனை அறியமுடிகிறது. இக்கருத்தையே ஔவையார்,

"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி,
குறுகத் தரித்த குறள்"

என்று கூறியிருப்பது ஒப்புநோக்கத்தக்கது.

**அறிவியலும் ஆன்மீகமும்**

தமிழர்கள் வாழ்வில் எழுவது முதல் தூங்கும்வரை செய்கின்ற ஒவ்வொரு செயலிலும் அறிவியல் இருந்திருக்கிறது. பருகும் நீரிலும் உண்ணும் உணவிலும் அறிவியல் கண்டவர்கள் தமிழர்கள். தமிழ் இலக்கிய உலகில் தன்னிகரற்று விளங்குவது திருப்பாவை, ஆண்டாள் பாடிய இப்பாசுரங்களும் மண், மரபு சார்ந்து, அறிவியல் ஆய்ந்து காதலும் கவித்திறனும் இணைந்த பக்திநெறி கமழும்.

"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்,
நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்,

ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்,

கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்

நாராயணனே, நமக்கு பறைதருவான்,

பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்."[5] (திருப்பாவை, பா.1)

ஆண்டாள் மார்கழி மாதத்தை தேர்ந்தெடுக்க ஒரு காரணம் உண்டு. மாதங்களில் சிறந்தது மார்கழி என்கிறது ஆன்மீகம். மார்கழியில்தான் அதிக சக்தி கொண்ட பிராணவாயு அடுக்கு பூமிக்கு மிக அருகே வரும் என்கிறது அறிவியல். அறிவியலும், ஆன்மீகமும் எதிரெதிர் துருவங்கள் இரண்டும் ஒரு விதமான கருத்துகளைத் தாங்கியுள்ளன..

**முடிவுரை**

பக்தி இலக்கியம் நமது வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ள ஒன்று. இவ்வுலகில் பலகோடி உயிரினங்கள் வாழ்ந்தபோதிலும் மனிதன் மட்டுமே பல வியக்க வைக்கும் செயல்களையும் படைப்புகளையும் கண்டுபிடிப்புகளையும் செய்யும் ஆற்றல் மிக்கவனாக இருக்கிறான். இதற்கு காரணம் தன்னைவிட வலிமையான ஒன்று உள்ளது. அதுவே இறைவன், கடவுள், பரம்பொருள் என்று நம்பினான். எனவேதான் இறைவனின் செயல்களையும், சிறப்புகளையும், அறிவியல் சிந்தனைகளோடு இணைத்து இலக்கியங்களைப் படைத்துள்ளான் என்பது இக்கட்டுரையின் வழி எடுத்துரைக்கப்படுகிறது.

**மேற்கோள்கள்**

1.திருக்குறள், எண். 335.

2.சிவபுராணம், பா.வ.26-31.

3.திருமாலின் அவதாரங்கள், ப.15.

4.கம்பராமாயணம், பா.6312.

5.திருப்பாவை, பா.1

**துணைநூற்பட்டியல்**

1.புலியூர் கேசிகன் உரை, திருக்குறள், தென்றல் நிலையம், சிதம்பரம் -01.

2.ஜி.வரதராஜன், திருவாசகம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை -14.

3.மாருதிதாசன், திருமாலின் அவதாரங்கள், நர்மதா பதிப்பகம், சென்னை -17.

4. http://manakkalayyampet.blogspot.com/2013/06/blog-post_7584.html?m=1